Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 268

திங்கட்கிழமை 21 ஓகஸ்ட் 2023

ஆண்டு 2054

# கடன் மறுசீரமைப்பில் காலைவாரிய சீனா!

## நெருக்கடியில் இலங்கை

**கொழும்பு, ஓகஸ்ட் 21**

**இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக சீனா இறுதித் தீர்மானத்தை அறிவிக்காத நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் இலங்கை நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது என்று தெரியவருகின்றது.** »15



## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக.21

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

விசேட பூசைகளைத் தொடர்ந்து இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ள பெருந்திருவிழாவில் எதிர்வரும் 30ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், எதிர்வரும் 9ஆம் திகதி கைலாசவாகனத் திருவிழாவும், எதிர்வரும் 12ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 13ஆம் »15

## 120 மருத்துவர்கள் கறுப்புப் பட்டியலில்

கொழும்பு, ஓக.21

நாட்டிலிருந்து வெளியேறிய 120 விசேட மருத்துவர்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. »15

## யானை கொலை!

புதுக்குடியிருப்பு, உடையார்கட்டுக் குளத்துக்கு அருகே யானை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. தந்தம் மற்றும் வாலுக்காகவே இந்த யானை கொல்லப்பட்டுள்ளது என்று சந்தேகிக்கப்படுகின்றது. கொல்லப்பட்ட யானை 20 வயதுடையது என்று வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(அ-எ-19,113)



## சீனா - இந்தியா இடையே சிக்கித் திணறும் இலங்கை

### ஷியான் - 6 கப்பலால் இராஜதந்திர நெருக்கடி

கொழும்பு, ஓக. 21

சீனாவின் கண்காணிப்பு ஆய்வுக் கப்பல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைக்கு வரும் என்று கூறப்படும் நிலையில், அதற்கான அனுமதி வழங்கக்கூடாது என்று கொழும்பிடம், புதுடில்லி கோரிக்கை விடுத்துள்ளது. »15

## விசுவமடு விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 21

விசுவமடுவில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். »15

## அதிவேக பயணத்தால் இரு இளைஞர்கள் சாவு!

### வடமராட்சியில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக.21

வடமராட்சி, கலிகைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். »15

## ஐ.எம்.எப். உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் தாமதம்!

### 'வெரிட்டே ரிசேர்ச்' சஞ்சிகை ஆய்வு

கொழும்பு, ஓக. 21

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் கீழ் இலங்கையில் கண்காணிக்கப்படக்கூடிய 100 உறுதிமொழிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான தரவுகள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்று 'வெரிட்டே ரிசேர்ச்' சஞ்சிகை தெரிவித்துள்ளது. »15

பரந்தனில்

## கிணற்றிலிருந்து ஆயுதங்கள் மீட்பு!

விரிவு:- பக்.02

## மதுபானசாலை மோதலால் இளம் குடும்பஸ்தர் மரணம்

### சந்தேகநபர் ஒருவர் கைது



வவுனியா, ஓக.21

மதுபானசாலையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வவுனியா, பூந்தோட்டத்தில் நடந்துள்ளது. »09

## 'திருப்பி அடியுங்கள்'

### மனோ கணேசன் ஆவேசம்



முல்லைத்தீவு, ஓக.21

மலையக மக்களை யாரேனும் தாக்கினால் அந்த வன்முறைக்கு எதிராகவும், தற்காத்துக் கொள்ளவும் திருப்பி அடியுங்கள். அது சட்ட வரம்புக்கு உட்பட்டதே - இவ்வாறு தெரிவித்தார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன். »15

## சிங்கப்பூர் பறக்கும் ரணில்

கொழும்பு, ஓக.21


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரு நாள் உத்தியோகபூர்வ பயணமாக இன்று சிங்கப்பூர் புறப்படுகின்றார். அவருடன் »09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூரில் இதுவே கடைசிப் பொங்கல்!

## எச்சரிக்கிறார் விகாராதிபதி



**கொழும்பு, ஓக. 21**

**முல்லைத்தீவு குருந்தூர்மலையில் நடைபெற்ற பொங்கல் வழிபாடே தமிழர்களின் இறுதிப் பூசையாக இருக்க வேண்டும் என்று குருந்தூர்மலை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த குருந்தூர் மலையை ஒருபோதும் தமிழர்களுக்கு விட்டுக் கொடுக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. இதனை நாம் தவறான தீர்மானமாகவே கருதுகிறோம். சம்பிரதாய ரீதியான இந்து மக்கள் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கமாட்டார்கள்.

வடக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வாழ்வதை விரும்பாத தரப்பினர் விகாரையின் கட்டுமானப்பணிகளை எதிர்த்தனர். இவ்வாறான இனவாதத்தை தூண்டும் தரப்பினரே இன்று பொங்கல் வழிபாடுகளை முன்னெடுத்துள்ளனர். நீதிமன்ற உத்தரவை மதிக்கும் வகையில் நாம் இதற்கு இடையூறு விளைவிக்காதிருந்தோம். எனினும், இங்கு நடைபெறும் இறுதிப் பூசையாக அல்லது நிகழ்வாக இது இருக்கவேண்டும்.

குருந்தூர்மலையில் அமைக்கப்பட்ட விகாரை தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து தீர்ப்புகளையும் சவாலுக்குட்படுத்தி நாம் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளோம். இந்தப் பிரச்சினையை மேன்முறையீட்டு நீதிமன்றில் தீர்த்துக் கொள்ள நாம் எதிர்பார்த்திருக்கிறோம். இந்த தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

இது இலங்கையின் சொத்து. இதன் உண்மையான உரிமையாளர்கள் பௌத்தர்களே. இவற்றைப் பாதுகாக்கவும் இதன் பயனைப் பெற்றுக்கொள்ளவும் அனைவருக்கும் உரிமையுண்டு. எனினும், இது பௌத்தர்களுக்கானது. அந்த உரிமையை எவராலும் பறிக்கமுடியாது - என்றார். (ஒ-இ)

## குருந்தூரில் மாதம்தோறும் பொங்கல் நடத்துவோம்

### வேலன்சுவாமி அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் மாதந்தோறும் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் திட்டமிட்டுள்ளதாக பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் பேரியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார். அனைத்து மக்களையும் இந்த வழிபாடுகளில் கலந்துகொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ஒ-இ)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஸ்ரீவரத விக்கின விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் இடம்பெறும் என ஆலய நிர்வாகசபை தெரிவித்துள்ளது. (ச)

## மாகாண ஆலோசனை சபை பிரதமரின் குழுவிடம் முடிவு!

கொழும்பு, ஓக. 21

13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவினரே, மாகாண ரீதியிலான ஆலோசனைசபை குறித்து தீர்மானம் எடுக்கவுள்ளனர் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

13ஆவது திருத்தச்சட்டம், மாகாணசபைகளுக்கான ஆலோசனைசபை மற்றும் ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அண்மையில் சந்திப்பொன்றை நான், கலாநிதி விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முன்னாள் காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் நேரில் நடத்தினோம். இதன்போது, 13 ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு சம்பந்தமான விடயங்களை பிரதமர் தலைமையிலான குழுவினரே கையாளவுள்ளதாகவும், அவர்கள் அந்த விடயங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு திருத்தங்களை முன்வைக்கவுள்ளதாகவும் எமக்குத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை- மாகாண சபைகள் தொடர்பான ஆலோசனைசபை தேவையா? இல்லையா? என்பதை பிரதமர் தலைமையிலான குழுவினரே தீர்மானிக்கவுள்ளனர். பொருளாதார ரீதியான விடயங்களை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி விடயங்களில் பின்னடைவுகள் இருப்பதாக அவர் கரிசனை கொண்டுள்ளார். அந்தவகையில், மாகாண ஆலோசனை சபை பொருளாதார விடயங்களையும் கையாள வேண்டிய நிலைமை ஏற்படவுள்ளது. அத்துடன், எம்மால் மாகாண ஆலோசனைசபைக்காக கலாநிதி விக்னேஸ்வரன், நிர்மலா சந்திரகாசன், குருநாதன், செல்லத்துரை உள்ளிட்டவர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

அத்துடன், நாடாளுமன்ற பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யாத அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரையும் உள்ளீர்க்கும் யோசனைகளும் ஜனாதிபதிக்கு உள்ளது. அந்த வகையில் மாகாண ஆலோசனை சபை அமைக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நான் பங்கேற்பேன் - என்றார். (ம)


## உ/த பெறுபேறு விரைவில்

கொழும்பு, ஓக. 21

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை இந்த மாத இறுதியில் வெளியிட முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள் முதற்கட்ட மதிப்பீட்டுப் பணிகள் சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி வரை இடம்பெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டாளர்களை தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரும் நடவடிக்கை அடுத்த மாதம் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-இ)




## பரந்தனில் கிணற்றிலிருந்து ஆயுதங்கள் மீட்பு!

கிளிநொச்சி, ஓக. 21

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தனில் கிணறொன்றிலிருந்து ஒருதொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கிணற்றின் உரிமையாளர் கிணற்றை சுத்தம் செய்யும்போது ஆயுதங்கள் தென்பட்டன. அதனையடுத்து இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினார். தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் பழைய பி. கே. எல். எம். ஜி. மற்றும் 'ஏகே' ரவுன்ஸ்கள், 60 எம் ஷெல் 5, டிக்னெட்கள் சார்ஜர்கள் மற்றும் பழைய இலத்திரனியல் பொருள்கள் ஆகியவற்றை மீட்டனர். இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-19-27)

## நிர்வாக அதிகாரப்பகிர்வு விரைவில் சட்டவரைவு!



கொழும்பு, ஓக. 21

13 ஆவது திருத்தத்தில் காணப்படுகின்ற நிர்வாக அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் தலைமையிலான குழுவால் சட்டவரைவு தயாரிக்கப்பட்டு, அது நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்குரிய பணிகள் ஆரம்பமாகியுள்ளன என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழு 13 ஆவது திருத்தத்தின் நிர்வாக அதிகாரங்களைப் பகிர்வது சம்பந்தமான சட்டவரைவு ஒன்றைத் தயாரிக்கவுள்ளது.

அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அனைத்துத் தரப்பினரினதும் கருத்துகள் பெறப்பட்டதன் அடிப்படையில் இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளது. மேல் மாகாண முதலமைச்சராக நான் பணியாற்றியவன் என்ற அடிப்படையில் நிர்வாக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

இங்கு காணி, பொலிஸ் போன்ற உணர்வுபூர்வமான விடயங்கள் தொடர்பில் தற்போது கலந்துரையாடுவது எதிர்காலத்தை நோக்கிய முன்னெடுப்புகளை வெகுவாகப் பாதிப்பதாகவே அமையும்.

ஏனெனில், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் காணப்படுகின்ற காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேசியப் பாதுகாப்புடன் தொடர்புடையவை. ஆகவே, அவை தொடர்பில் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்திக்கவேண்டியுள்ளது. நீண்ட கலந்துரையாடல்கள் அவசியமாகின்றன - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'வெள்ளியும், ஞாயிறும் ரியூசனை வைக்கக் கூடாது. பிள்ளையளை அறநெறி வகுப்புக்கு விடுங்கோ' எண்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் போட்ட உத்தரவால, இப்ப ஊர்வழியளில அறநெறி வகுப்புகளுக்குப் போற பிள்ளையளின்ர எண்ணிக்கை கூடியிருக்காம். ஆனால் சட்டிக்க இருந்து அடுப்புக்க விழுந்த கதையா, அறநெறி வகுப்பெண்ட பேரில பள்ளிக்கூட சமய பாடப் புத்தகத்தைத்தான் அங்கை படிப்பிக்கினமாம். இதைவிட ரியூசனுக்கே போயிருக்கலாமே எண்டுறமாதிரி சில அறநெறிவகுப்புகளில, தேவாரம் சொல்லாத பிள்ளையளுக்கு அடிக்கிறது, முட்டுக் காலில விடுறது எண்ட தண்டனையளுக்கும் குறைவில்லையாம்.


அறநெறி வகுப்புகளில் எங்கட கலாசாரப் பழக்க வழக்கங்கள், சமய நடைமுறைகள், கோலம் போடுறது, மாலை கட்டுறது, தோரணம் பின்னுறது , பண்ணிசை, நடனம், ஓவியம் எண்ட மாதிரியான செயற்பாடுகள் இதுகளைச் சொல்லிக் குடுத்தாத்தான் அந்தப் பிள்ளையளுக்கும் பிரியோசனமா இருக்கும். ஆனால் அப்பிடியான விசயங்களைச் சொல்லிக் குடுக்கக்கூடியமாதிரி இப்பத்தை அறநெறிவகுப்புகளில படிப்பிக்கிற கனபேர் இல்லை. கூடுதலா கோயில்காரர்தான் இந்த அறநெறி வகுப்புகளில படிப்பிக்கிறவைக்கு சம்பளம் குடுக்கிறவை. கோபுரம் கட்டிறதெண்டா அள்ளிக்குடுக்கிற கோயில்காரர், இப்பிடி பிரியோசமான விசயங்களுக்கு கிள்ளித் தெளிக்கவே பஞ்சிப்படுவினம். அதால அவை குடுக்கிற அடிமாட்டுச் சம்பளத்துக்கு ஆர்தான் நல்லவிசயங்களைப் பிள்ளையளுக்குச் சொல்லிக்குடுக்க வருவினம்? அதால ஏ.எல். எடுத்திட்டு இருக்கிற சிலரும், நேர்சரி ரீச்சர்மாரையும் வைச்சுத்தான் அறநெறி வகுப்புகள் எண்டபேரில கன இடங்களில சமயப்பாடப் புத்தகத்தைப் படிப்பிக்கிற வேலை நடக்குது.

உண்மையாவே யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஆசைப்படுறமாதிரி, அறநெறி வகுப்புகளில பிள்ளையளின்ர ஆளுமை வளரவேணுமெண்டால், அவையின்ர மனோநிலை நல்லதா வரவேணுமெண்டால் அந்த அறநெறி வகுப்புகளின்ர தரத்தையும் மேம்படுத்தவேணும்.
அங்க படிப்பிக்கிறவைக்கு ஒரு கௌரவமான சம்பளத்தைக் குடுத்தோ இல்லாட்டி தன்னார்வமா நல்ல விசயங்களைச் சொல்லிக் குடுக்கக்கூடியவையைக் கண்டுபிடிச்சு அவைமூலமோ அறநெறி வகுப்புகளுக்கு வாற பிள்ளையளுக்கு சமூகத்தோட சேர்ந்து வாழத் தேவையான நல்ல விசயங்களைச் சொல்லிக் குடுக்கலாம். அதுக்குரிய நிதியைத் திரட்டுறது இப்பத்தைச் சூழலில பெரிய வேலை இல்லை. ஆக்களை வாளால வெட்டுறதுக்கே லட்சக் கணக்கில அனுப்ப ரெடியா இருக்கிற அதே வெளிநாடுகளில இப்பிடியான நல்ல விசயங்களுக்கு காசு அனுப்பவும் ஆக்கள் இருக்கினம்.
அவையிட்ட கேட்டால் இந்த அறநெறி வகுப்புகளுக்குத் தேவையான காசைத் திரட்டலாம். தனிய இந்த அறநெறி வகுப்பில படிப்பிக்கிறது, சொல்லிக்குடுக்கிறது எண்டில்லாமல் பிள்ளையளுக்கு அடிக்கடி போட்டியள் வைச்சு பரிசுகளைக் குடுக்கிறது இன்னும் ஊக்கப்படுத்துற மாதிரி இருக்கிறதோட, இதுவரைக்கும் அறநெறி வகுப்புகளுக்குப் போகாமல் இருக்கிற பிள்ளையளையும் போகவைக்குமெல்லோ. பொறுப்பானவை இதுகளைக் கணக்கில எடுப்பினமோ?



- பட்சி





படங்கள் ஐ.சிவசாந்தன்

## நல்லூர்க் கந்தன்
# கொடிச்சீலை கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாயபூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது வழக்கமாகும்.
அதன்படி யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகிலுள்ள வேல்மடம் முருகன் ஆலயத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறியரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 10 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தது. அங்கு ஆலயத்தின் வெளிவீதி உலாசென்று சுபநேரத்தில் பூசைகள் இடம்பெற்று, கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது. மஹோற்சவம் இன்று முற்பகல் பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
(ஒ-20,27,66)

# இன்பர்சிட்டி விநாயகர் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 21
வடமராட்சி, வியாபாரிமூலை - இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 9.10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 26ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (ச-100)








# நல்லூரான் சிறப்பம்சம்

## வண்ணக் கொடி ஏறுது

கொடி ஏறுது கொடி ஏறுது
நல்லை பதி வாழ் கந்தனுக்கு
அடியார்கள் அகம் மகிழ இனி
அல்லல் ஏதும் இல்லை எனக் கொடி ஏறுது
வடிவேலவன் புகழ் பாடியே
வண்ணச் சேவற் கொடி ஏறுது
நாடி வரும் அடியார்கள் மிடி தீர்க்க
மங்கல ஒலியுடன் கொடி ஏறுது

**சி. மகாலட்சுமி**
கொக்குவில்

## கொடியேற்றி எம்மக்களுக்கு நல் விடியலைத்தா வேலவா

நல்லையில் வீற்றிருந்து
நல்லாட்சி புரியும் வேலவர்!
அடியவர்க்கு அருள் மொழியும்
ஆறுமுக வேலவர்!
அலங்கார கந்தன் அன்பு வடிவான வேலவர்!
நாடி வருவோர்க்கு நல்லருள்
புரியும் நல்லூர் வேலவர்!
சூரபத்மனை போரில் வென்று தேவர்
சிறை மீட்ட வேலவா!
எம் மக்கள் இன்றுவரை பட்டுக் கொண்டிருக்கும்
துயரங்கள் இனிப்போதும் வேலவா!
கொடியேற்றி எம்மக்களுக்கு
நல் விடியலைத் தா வேலவா!

**நயினை விசு.இராசாயகம்**

## ஏறுது பார் கொடி


ஏறுதுபார் கொடி நல்லூரில்
இனி இல்லை துன்பம் உனக்கு
எல்லாமே சாதகமாய் வந்துவிடும்
இருந்துபார் முழுதும் உண்மை

மாறுது உலகம் என்றாலும் கூட
மனம் மொழி மெய்களால்
மறவாது பணிந்தேத்துவர் முருகனை
மன்னிய திருநல்லூரில்

**கே.எஸ். சிவஞானராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்தொடு கோபுர கண்கவர் கோயில்





நல்லூர்க் கொடியேற்றம் இன்று. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

■ கே.எஸ்.சிவஞானராஜா

மாப்பாணர் பரம்பரையில் காப்பாகிவந்த யாழ்ப்பாணக் கோயிலாக நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் திகழ்கிறது. முருகன் செல்வச் செழிப்போடு நல்வித்தை தந்து நானிலம் காப்பவனாக, பல்விதமானவர்களை ஒன்றிணைப்பவனாக, வல்லசுரர்கள் மாளவும் நல்லசுரர்கள் (நல்ல சுரர்கள் மனிதருள்ளும் தேவர்களாக மிளிர்பவர்கள்) வாழவும் ஆட்சிபுரிகின்றவனாக நல்லூரில் ஒரு ரூபா எனும் எளிமை ததும்பும் அற்புதனாக அன்றும் இன்றும் திகழ்கின்றான்.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்பதற்கொப்ப முருகன் சந்நிதியில் யாவரும் சமன் என்ற தாரக மந்திரம் நீள நினைத்து நீண்டு ஒலிக்கின்றது. தங்கமே மின்னும் பொற்கோயிலாக மிளிரும் பான்மையில் நல்லூர் விளங்கியபோதும் ஏழை மக்களின் பங்காளியாகவும் தோழனாகவும் நல்லூரான் காட்சி தருகின்றான். நல்லூரான் உலகின் சிறந்ததொரு தெய்வீகப் பேரொளியாக மிளிர்ந்து உலகையே வரவழைக்கின்றான்.

கலியுகமானது உலகில் ஆரம்பமாகிவிட்டது. கண்டது எதுவெல்லாம் கொண்டதுவாக வாழ்க்கையோ பேராசையால் நிறைந்துள்ளது. பேராசையே அனைத்துத் துன்பத்துக்கும் காரணமாகும். உலகம் இதையே தற்பொழுது அனுபவிக்கிறது.

ஒரு ரூபா என்பது ஏழைகள் கண்ணிலொற்றிக் கை எடுத்துக் கும்பிடும் ஆகக் குறைந்த பெறுமதியான நாணயமாகும். இந்த ஒரு ரூபாவை மட்டுமே அர்ச்சனைக்குரிய பொருளாக நல்லூரான் ஆசைப்படுகின்றான். நல்லூர் முருகனின் கொடியேற்றம் ஆரம்பிப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்னதாகவே யாழ்ப்பாணம் களைகட்டத் தொடங்கிவிடுவதனால் உலகில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் நல்லூரை நாடி நேர்த்தி நிறைவேற்றிட ஓடிவருவார்கள். சிறுவர்கள் முதல் பெரியோர்கள்வரை மிகுந்த பக்தியோடு விரதமிருந்து முருகவரம் பெறுவார்கள்.

'கருதிக் கருதிக் கவலைப்படுவார், கவலைக் கடலைக்கடியும் வடிவேல்' வலிகளையும் வதைகளையும் அனுபவித்து விட்ட மக்களுக்கு அவர்களது காயவடுக்களுக்கு ஒத்தனம் கொடுத்து பையப்பைய மனதை ஆற்றி பத்திரமான பாலிதமான மனிதனாக மாற்றுவதற்கு ஏற்ற ஒரு வைத்திய பீடமாகி வரந்தரும் ஆலயமாக இருப்பதால், நல்லூர் முருகன் ஓர் உளநல மருத்துவனாகவும் வியங்குகின்றான்.

வெளிநாட்டவர் ஆக்கிரமிப்புக்குள்ளும் தன்னிலை குலையாதவாறு இன்று பெரும் அதிசய மாற்றங்களோடு நிமிர்ந்து -உயர்ந்து தாழாத கீர்த்தியோடு, தடைகள் வாராத செல்வச் செழிப்போடு பொற்கோயிலாகப் பிரமிக்க வைக்கிறது.

இப்படித்தான். ஆலயத்தை நிர்வாகம் செய்யவேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக நல்லூர் முதன்மை பெறுகிறது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேய தளபதியான பிலிப்.டி.ஒலிவேரா 1920இல் தமது அரசின் தலைநகரை யாழப்பாணத்துக்கு மாற்றியபோது நல்லூர்முருகன் ஆலயம் வியத்தகு நகரத்தால் பொலிந்திருந்தது.

யாழ்ப்பாண இராஜ்ஜியத்தை ஆண்ட கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சர்களில் ஒருவரான புவனேகபாகு என்பவரால் நல்லூர் கட்டுவிக்கப்பட்டதென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதியில் ஆட்சியாளர்களின் இறுக்கம் ஓரளவு தளர்ந்தபோது நல்லூர் ஆலயம் மூன்றாவது தடவையாக மீள அமைக்கப்பட்டது. இந்த ஆலயத்தின் ஆரம்பகால இடம் தற்போதைய நல்லூர் - செம்மணி வீதியில் அமைந்துள்ள சென்.ஜேம்ஸ் ஆலய இருப்பிடம் என ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, பூதத்தம்பி வளைவு, புலிராச பண்டாரம், சங்கிலிபண்டாரம், பண்டாரக்குளம், சட்டநாதர் ஆலயம், தையல் நாயகி அம்மன் ஆலயம், சாலை விநாயகர் ஆலயம், முப்படைக் கூட்டம் என நல்லூரின் வரலாறுகளுடன் பின்னிப்பிணைந்த அம்சங்களாகும்.

இத்தகைய இன்றைய நல்லூரை தமிழர்களது பாரம்பரிய பண்பாட்டுப் புராதன அடையாளமாக மிகவும் பயபக்தியாகப் பேணுவது முதல் கடமையாகும். ஆண்களும் சரி, பெண்களும் சரி அவரவர் பண்பாட்டு உடைகளோடு வழிபாடாற்றுவது மிகமிகப் பிரதானமாகும். ■

## 'நல்லைக்குமரன்' மலர் வெளியீடு

யாழ்ப்பணம், ஓக. 21

நல்லூர்க் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழுவால் வெளியிடப்படும் 'நல்லைக்குமரன்' மலர் வெளியீடு எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.சுதர்சன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் பெற்றுக்கொள்ளவுள்ளது. அத்துடன் தமிழுக்கும் சைவத்துக்கும் சமூகத்துக்கும் பெரும்பணியாற்றியவருக்கான 'யாழ்.விருது' இந்த முறை இணுவில் குருகுலம் தர்மசாஸ்தா சிவஸ்ரீ தாணுநாதக்குருக்கள் மஹாதேவக்குருக்கள் பெறவுள்ளார் என்று யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக்குழு அறிவித்துள்ளது. (ச)

## விசேடதேவை குழந்தைகளுக்கு யாழில் 'சிலோன் ஸ்டெப்ஸ்'

யாழ்ப்பாணம், ஓக. 21

விசேட தேவையுடைய குழந்தைகளுக்கான பாடசாலையான 'சிலோன் ஸ்டெப்ஸ்' நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தனது கிளையை ஆரம்பிக்கவுள்ளது. பலாலி வீதி, திருநெல்வேலியிலுள்ள அம்மாச்சி உணவகம் அருகில் இந்தக் கிளை இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தியாவின் ஸ்டெப்ஸ் நிறுவனத்தின் ஓர் இணைந்த நிறுவனமான இந்தப் பாடசாலை மனநலமருத்துவர், தொழில் சிகிச்சை நிபுணர், பிசியோதெரபிஸ்ட், உளவியலாளர் உட்பட தகுந்த சேவைகளை வழங்கக்கூடிய முழுமையான ஆளணியைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அனுகூலம் உண்டாகும். மகிழ்ச்சி செய்தி கிடைக்கும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிரிகள் பணிந்து வருவார்கள்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்புக் கரையும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம்.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும், செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படலாம். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிடவும் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஊசலாடும் கல்விக்கட்டமைப்பு!

இலங்கையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களில் சுமார் 85 வீதமானவர்கள் கல்வியில் பின்தங்கியுள்ளனர். எண்ணுவதற்கும், எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் கூட அவர்கள் சிரமப்படுகின்றனர் என்று யுனிசெப் அமைப்பு எச்சரித்திருக்கின்றது. உலகளாவிய ரீதியில், குறிப்பாக பின்தங்கிய மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கல்வி – கலை – கலாசாரம் என்பவற்றின் நிகழ்காலப் போக்கையும், அதன் இருப்பையும் காலக்கண்ணாடியாக வெளிப்படுத்துவதை யுனிசெப் அமைப்பு தன் பிரதான செயற்றிட்டங்களில் ஒன்றாகக் கொண்டிருக்கின்றது. ஆதலால், பொதுவான பொறிமுறைகள் மற்றும் பொதுக் கணிப்புக்களின் பாற்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இந்த எச்சரிக்கையும், அதற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் தரவுகளும் தகவல்களும் உண்மையில் எமக்கு ஆபத்தம்சங்களே.


முன்னொரு காலத்தில் தெற்காசியாவில் அதியுச்ச கற்றறிந்தோர் சராசரியைக் கொண்டிருந்தது இலங்கை. போர்க்காலத்தில்கூட, இலங்கையை விடவும் பொருளாதாரத்தில் பலமான இந்தியா, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளைக்கூட இலகுவாகப் பின்தள்ளி, கற்றறிந்தோர் சராசரியில் 'இமயத்தில்' இருந்த இலங்கை அண்மைக்காலமாகவே கல்வியில் கடைநிலையில்தான் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பயணத்தின் உச்சபட்சக் கடைநிலை அடைவாகத்தான் யுனிசெப் அமைப்பின் எச்சரிக்கை வந்தமைந்திருக்கின்றது. கல்வியில் இலங்கையின் வீழ்ச்சிக்குக் காரணம் கொரோனாப் பெருந்தொற்று என்றுதான் கற்பிதம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கொரோனாப் பெருந்தொற்றுக் காலம் மாணவர்களுக்கும் கல்விச் செயற்பாட்டுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரிக்கச் செய்ததுதான். இந்த இடைவெளியால் இடைவிலகல்களும் அதிகரித்தன. ஆனால், ஆரம்பக் கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சிக்கும் கொரோனாப் பெருந்தொற்றுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, இதுவே உண்மை. ஏனெனில், கொரோனா இலங்கையை இரையாக்கி மூன்றரை ஆண்டுகள் கடக்கின்றன. அதேவேளை இலங்கையின் கல்விக் கட்டமைப்புக்குள் கடந்த மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இணைந்த மாணவர்களிடத்தில்தான் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆக, அரசாங்கத்தின் கல்விக் கொள்கையிலும் அதன் செயற்றிட்டத்திலும் ஏற்பட்டிருக்கும் தோல்விதான் இந்த எதிர்மறைப் பயணப்பாட்டின் வெளிப்பாடு என்பதே இரண்டாம் கருத்தின்றிய விடயம்.

எந்தவொரு நாடு தன் ஆரம்பக்கல்விக் கட்டமைப்பைப் பலப்படுத்துகின்றதோ அந்த நாட்டில்தான் வளமான கல்விச் சமூகம் உருவாகும். ஸ்கன்டிநேவிய நாடுகளான நோர்வே, பின்லாந்து, டென்மார்க், சுவீடன் நாடுகள் இன்று உலகின் ஆகச்சிறந்த கல்விக் கட்டமைப்பைக் கொண்டுள்ள நாடுகளாக மிளிர்கின்றமைக்கு அந்தந்த நாடுகளில் உள்ள ஆரம்பக்கல்விக் கட்டமைப்புத்தான் பிரதான காரணம். ஆரம்பக்கல்வி ஆரோக்கியமானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் வளம்மிக்கதாகவும் அமைகின்றபோது அதற்கடுத்த கல்விக் கட்டமைப்புக்கள் தானாக வளம்பெறும் என்பது ஸ்கன்டிநேவிய தேசங்களின் நம்பிக்கை. கடந்த பத்தாண்டுகளில்தான் இந்தத் திட்டங்களை அந்தத் தேசங்கள் வளப்படுத்தியிருக்கின்றன. ஆனால், இதே பத்தாண்டுகளில் இலங்கையிலோ கழுதை தேய்ந்து கட்டெறும்பாக ஆகிய கதையே எஞ்சியிருக்கின்றது.

இலங்கையில் கல்வித்துறைக்காக (பட்ஜெட்டில்) ஒதுக்கப்படும் தொகை மிகக்குறைவு என்ற கணிப்பையும் 'யுனிசெப்' அம்பலப்படுத்தியிருக்கின்றது. எவ்வளவு பாரதூரமான விவகாரம் இது. பாதுகாப்புக்காகவும், புத்தசாசன அமைச்சுக்காகவும் பெருமளவு நிதி விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கையில் எவ்வாறு கல்வித்துறைக்கு நிதி கிட்டும்? அண்மைக்காலமாக இலங்கைச் சிறைகளில் நிலவும் இடநெருக்கடி தொடர்பில் அதிகம் அலட்டிக் கொள்ளப்படுகின்றது. சிறைச்சாலைகளைப் பெரிதாகக் கட்டவேண்டியதன் அவசியத்தைத்தான் எங்கள் மேதாவிகள் உணர்ந்திருக்கின்றார்களே அன்றி, அந்தத் தொகையை வைத்து அணையாவிளக்கான கல்வியைச் சீர்படுத்தினால், சிறைகளின் தேவை தானாகக் குறையும் என்ற எண்ணப்பாடு அவர்களின் மனங்களை ஆட்கொள்ளவில்லை. இந்தப் பிறழ் சிந்தனைகள்தான் இன்று 85 வீதமான மாணவர் சமூகம் கல்வியறிவு குன்றிய நிலையில் வளர்ந்து வருவதற்கு முதன்மைக் காரணம்.

### நாளொரு நல்வார்த்தை

உண்மையான
சிறந்த மனிதர்களுக்கான
முதல் சோதனை என்பது
அவர்களின் பணிவே. - ஜோன் ரஸ்கின் -






## வறட்சியான காலநிலை அரிசி தட்டுப்பாடில்லை

**கொழும்பு, ஓக. 21**

**வறட்சியான காலநிலை காரணமாக எதிர்வரும் காலங்களில் அரசித் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

அம்பலாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிறுவனத்துக்குச் சொந்தமான பயிர் நிலங்களில் மேற்கொள்ள அறுவடை நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறுபோகத்தில் நாடளாவிய ரீதியில் 5 இலட்சத்து மூவாயிரம் ஹெக்ரேயரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் ஏக்கர் பயிர்ச் சேதம் ஏற்பட்டபோதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படாது.

கடந்த பெரும்போகத்தில் கூடுதலாக நெல் அறுவடை செய்யப்பட்டதால் அடுத்துவரும் பெரும்போகம் மற்றும் சிறுபோகங்களுக்குத் தேவையான நெல் எம்மிடம் உள்ளது என்றும் விவசாய அமைச்சர் குறிப்பிட்டார்.

(ச-இ)

## இலங்கை – இந்தியா இடையே விரைவில் படகுச் சேவைகள்!

### நாகபட்டினம் துறைமுகம் தயார்

இலங்கை - இந்தியா இடையே விரைவில் படகுச் சேவைகள் இடம்பெறவுள்ளன. நாகபட்டினம் துறைமுகம் இதற்காகத் தயாராகியுள்ளது என்று இந்திய அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவை சர்வதேச அளவில் இணைக்கும் வகையில் இலங்கைக்குத் தொடங்கவுள்ள முதன்மையான படகுச் சேவைக்கு வெளிவிவகார அமைச்சு பச்சைக்கொடி காட்டியுள்ளது. இது நாடுகளுக்கிடையே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வர்த்தகத்தையும் மேம்படுத்தும். இந்தப்படகுச் சேவையை விரைவில் தொடங்குவதற்கு நாகபட்டினம் துறைமுகம் தயாராகி வருகிறது. இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே படகுச் சேவையை புதுப்பிப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1980ஆம் ஆண்டு வரை செயற்பாட்டில் இருந்த இந்தியா -இலங்கை இடையிலான பாரம்பரிய கடல்வழிகளை புதுப்பிக்கும் வகையில் இந்தத்திட்டம் இருக்கும் - என்றார். (ம)

## வெங்காய ஏற்றுமதி வரியை அதிகரிக்கும் இந்தியா

வெங்காயத்துக்கு 40 சதவீத ஏற்றுமதி வரியை விதிக்க இந்தியா தீர்மானித்துள்ளது.

இந்தியாவின் இந்தத் தீர்மானம் இந்தியாவிடம் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்யும் இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், மலேசியா மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் போன்ற நாடுகளைப் பாதிக்கும் என்று சர்வதேச ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன.

அதேவேளை, நாட்டில் வெங்காயப் பயிர்ச்செய்கை தொடர்பான அறிக்கை ஒன்றை திணைக்களஅதிகாரிகளிடம்விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கோரியுள்ளார். (எ-இ)

**நாளை** 22.08.2023 செவ்வாய்க்கிழமை ஆவணி 05

சுபநேரம் : 10.35 - 12.05
ராகுகாலம் : 03.05 - 04.35
ஷஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஹொக்கிப் போட்டி:
# யாழ்ப்பாணக் கல்லூரி தேசியத்துக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 21
இந்த ஆண்டுக்கான வடக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஹொக்கிப்போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியின் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு முதலிடத்தைப் பெற்று தேசியத்துக்குத் தெரிவாகியுள்ளது.
இந்த அணி காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிச்சுற்றுப் போட்டிகளில் முறையே யாழ். இந்துக் கல்லூரி, வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி மகா வித்தியாலயம், யாழ். பரியோவான் கல்லூரி ஆகியவற்றுடன் மோதி வெற்றிபெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது.
கடந்த ஆண்டும் மாகாணமட்டப் போட்டியில் இந்த அணியே ஹொக்கியில் முதலிடத்தை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## லவ்லி சாவா அணியை வீழ்த்தியது பைட்டர்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 21
தென்மராட்சிக் கிண்ணத் தொடரில், லவ்லி சாவா மற்றும் மட்டுவில் பைட்டர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பைட்டர்ஸ் அணி வெற்றிபெற்றது.
முதலில் துடுப்படுத்தாடிய மட்டுவில் பைட்டர்ஸ் அணியினர் 10 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றனர். வாகீசன் 14 ஓட்டங்களையும், கிரிசாந் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். லவ்லி அணி சார்பாக பந்துவீச்சில் அமல்ராஜ், அருண் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்கள். 70 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கோடு களமிறங்கிய லவ்லி சாவா அணியினர் 50 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.
இதையடுத்து மட்டுவில் பைட்டர்ஸ் அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. கவிராஜ் 19 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.
மட்டுவில் பைட்டர்ஸ் சார்பில் பந்துவீச்சில் துசிதன் 2 ஓவர்களில் 2 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக்கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தியதோடு ஒரு ஓட்டமற்ற ஓவரையும் வீசியிருந்தார். மதிவதனன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)



## சங்கா ஸ்ரோம் அணி பதற்றமில்லாத வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 21
உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்றுவரும் தென்மராட்சி கிண்ணத் தொடரில் கைதடி சுப்பர் கிங்ஸ் அணி மற்றும் சங்கா ஸ்ரோம் பைட்டர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சங்கா ஸ்ரோம் அணி வெற்றிபெற்றது.
நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற சங்கா ஸ்ரோம் அணித்தலைவர் களத்தடுப்பைத் தேர்வுசெய்ய முதலில் துடுப்படுத்தாடிய கைதடி சுப்பர் கிங்ஸ் அணியினர் 8.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக அங்குசன் 18 ஓட்டங்களையும், ரூபன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். 71 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய சங்கா ஸ்ரோம் அணியினர் 8.2 ஓவர்களிலேயே இலக்கை அடைந்து வெற்றிபெற்றனர். திசோன் ஆட்டமிழக்காது 22 பந்துகளில் 56 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வித்திட்டார். (ம)

## கைதடி சுப்பர் கிங்ஸ் அசத்தலான வெற்றி!

யாழ்ப்பாணம், ஓக. 21
உதயன் ஊடக அனுசரணையோடு நடைபெறும் தென்மராட்சிக் கிண்ணத் தொடரில், கைதடி ஸ்கை வோக்கர்ஸ் எதிர் கைதடி சுப்பர்கிங்ஸ் இடையிலான ஆட்டத்தில் சுப்பர் கிங்ஸ் வெற்றிபெற்றது.
முதலில் துடுப்படுத்தாடிய கைதடி சுப்பர் கிங்ஸ் அணியின் லதுஜன் 19 பந்துகளில் 27 ஓட்டங்களையும், நிர்மலன் 7 பந்துகளில் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க 10 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றனர்.
89 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்கோடு பதிலுக்குத் துடுப்படுத்தாடிய கைதடி ஸ்கை வோக்கர்ஸ் அணியினர் 81 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். இதையடுத்து 7 ஓட்டங்களால் சுப்பர் கிங்ஸ் அணி வெற்றிபெற்றது. பந்துவீச்சில் கைதடி சுப்பர் கிங்ஸ் சார்பாக ரவிவர்மன் 3 இலக்குகளையும், ஜனிஸ்ரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

## சங்கா ஸ்ரோம் அணியை தோற்கடித்தது பைட்டர்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 21
உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்றுவரும் தென்மராட்சி கிண்ணத் தொடரில், மட்டுவில் பைட்டர்ஸ் எதிர் சங்கா ஸ்ரோம் அணியினர் மோதிய ஆட்டத்தில் மட்டுவில் பைட்டர்ஸ் அணி வெற்றிபெற்றது.
நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மட்டுவில் பைட்டர்ஸ் களத்தடுப்பைத் தேர்வு செய்ய முதலில் துடுப்படுத்தாடிய சங்கா ஸ்ரோம் பைட்டர்ஸ் அணியினர், திசோன் 10 பந்துகளில் 15 ஓட்டங்களையும் ரெனோஜன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க 10 ஓவர்களில் 61 ஓட்டங்களைப் பெற்றனர். மட்டுவில் பைட்டர்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் மதிவதனன் 4 இலக்குகளையும், கோபிநாத் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்படுத்தாடிய மட்டுவில் பைட்டர்ஸ் அணியினர் 7.2 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்று 4 இலக்குகளால் வெற்றி பெற்றனர். அதிகபட்சமாக வினோதன் 22 ஓட்டங்களையும், பார்த்தீபன் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். சங்கா ஸ்ரோம் அணி சார்பாக பந்துவீச்சில் தமிழ்நேசன், கௌசிகன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள். (ம)

## ஸ்கை வோக்கர்ஸ் அபாரமான ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 21
உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்றுவரும் தென்மராட்சி கிண்ணத் தொடரில் கைதடி ஸ்கை வோக்கர்ஸ் மற்றும் நுணாவில் ரொக்கர்ஸ் இடையிலான ஆட்டத்தில் ஸ்கை வோக்கர்ஸ் அணி வெற்றிபெற்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கைதடி ஸ்கை வோக்கர்ஸ் அணித்தலைவர் களத்தடுப்பைத் தேர்வுசெய்ய முதலில் துடுப்படுத்தாடிய ரொக்கர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக எட்வின் 19 பந்துகளில் 32 ஓட்டங்களையும், சதானந் 11 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் வோக்கர்ஸ் சார்பாக இளங்குமரன் 3 இலக்குகளையும், பிரவின் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.
80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குக் களமிறங்கிய வோக்கர்ஸ் அணி 9.1 ஓவர்களில் 81 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அதிகபட்சமாக இளங்குமரன் 18 பந்துகளில் 28 ஓட்டங்களையும், சாய்ராம் 3 பந்துகளில் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (ம)

## கிளிநொச்சி தமிழ்ச் சங்க 30 ஆவது ஆண்டு நிகழ்வு





கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் 30ஆம் ஆண்டு நிகழ்வும் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை தமிழ்ச் சங்கத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது.
தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் வே. தபேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் தலைவர் இறைபிள்ளை மற்றும் கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-214)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருத்துவர்கள் வெளியேற்றம் எதிர்காலத்தில் பெரும் சவால்

## வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

**வவுனியா, ஓக. 21**

**கடந்த ஒரு வருடத்தில் வடக்கு மாகா ணத்தில் இருந்து 50 மருத்துவர் களும், 20 தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். எதிர்காலத்தில் பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.**

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். வவுனியா மருத்துவமனையில் நேற்றுச் சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


மருத்துவர்களும், தாதியர்களும் வெளியேறுவது எமக்கு ஒரு சவாலான விடயம். அண்மைக்காலத்தில் கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இங்கு ஆரம்பிக்கப்பட வேண்டிய தாதிய பயிற்சிகள் ஆரம்பிக்கப் படவில்லை. இந்த வருடம் தாதிய கல்லூரியில் படித்து வெளியேறுபவர்கள் இருந்தாலும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு தாதிய பயிற்சிகள் இடம்பெறாத நிலை காணப்படும். அதேநேரம், வெளிநாடுகள் தாதியர்களை வரவேற்பதனால் அவர்கள் இங்கு வேலையை முடிவுறுத்தி வெளியேறலாம். அதனால் புதிய தாதியர்கள் வரமாட்டார்கள். இந்தநிலைமையால் நாம் பெரும் சவாலை எதிர்கொள்வோம்.

நாடு முழுவதும் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்றது. இருந்தபோதும் 90 வீதத்துக்கும் அதிகமான மருந்துகள் அந்தந்த மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

வவுனியா மருத்துவமனையில் இரத்த சுத்திகரிப்பு ஒரு நாளைக்கு 40 பேருக்கு செய்யப்படுகின்றது. இதனைச் செய்வதற்கான திரவத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டாலும் தற்போது அது கையிருப்பில் உள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் மருந்துத் தட்டுப்பாடு வட மாகாணத்தில் அனைத்து மருத்துவமனைகளிலும் ஏற்பட்டிருந்தது. இதனால் பொதுமக்கள் அசௌகரியத்தைச் சந்தித்திருந்தனர். தற்போது நிலைமை ஓரளவு சுமுகமாகி வருகின்றது.

இருந்தபோதிலும் ஒரு சில கிளினிக் மருந்துகள் மற்றும் விசேட மருத்துவத்துக்காக வழங்கப்படும் மருந்தை பெற்று வழங்குவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. மருத்துவமனைப் பணிப்பாளர் மற்றும் நிர்வாகத்தினர் நன்கொடையாளர்களிடம் மருந்துகளை பெற்று சிகிச்சை வழங்குகின்றனர் - என்றார். (எ-110)





# விருந்தினர் மண்டபம் யாழ். சிறையில் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விருந்தினர் காத்திருப்பு மண்டபம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சிறைச்சாலை முன்னாள் உத்தியோகத்தர் காசிப்பிள்ளை சதாசிவத்தின் குடும்ப உறுப்பினர்களால் இந்த விருந்தினர் காத்திருப்பு மண்டபம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

நிகழ்வில் சிறைச்சாலை உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-27)



# நெல்லை விற்பதற்கு விவசாயிகள் தயக்கம்

## நெல் கொள்வனவு சபை தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு விவசாயிகள் நெல்லை விற்பனை செய்யாததால், பல மாவட்டங்களில் நெற் களஞ்சியசாலைகள் மூடும் நிலைமை உருவாகியுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள் ளது.

ஒரு மாதத்துக்கும் குறைவான காலப்பகுதிக்கான நெல்லே தற்போது கையிருப்பில் உள்ளது.

நெல்லை கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு போதிய நிதி கிடைத்துள்ளது.

கடந்த பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 13 பில்லியன் ரூபாவைச் செலவிட்டது.

இந்த ஆண்டு சிறுபோகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 500 மில்லியன் ரூபாவை விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்படும் நெல்லை அரிசியாக மாற்றி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு விவசாயிகள் நெல்லை விற்பனை செய்ய முன்வராததால் பல மாவட்டங்களில் நெல் களஞ்சியசாலைகளை மூடும் நிலைமை உருவாகியுள்ளது என்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

# யாழ்.நகரில் கடை உடைத்து சிகரெட் திருடியவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக.21

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் யாழ். நகரில் உள்ள மதுபானசாலை ஒன்று உடைக்கப்பட்டு, 3 லட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகள் திருடப்பட்டிருந் தன. இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி கேவா வசந்த தலைமையிலான பொலிஸ் குழு முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்தது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சுத்தியல், சாவிகளுடன் கூடிய பை ஒன்றைக் கொண்டு சென்ற ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் விசார ணைக்குட்ப டுத்தப்பட்டார்.

விசாரணைகளில் அவர் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று கண்டறியப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் 63 வயதுடையவர் என்றும், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

# தொலைத்த நகை, பணம் உரியவரிடம் ஒப்படைப்பு!

## *சிகை அலங்கரிப்பாளருக்குப் பாராட்டு*

சாவகச்சேரி, ஓக. 21

நகை, பணம் உள்ளிட்ட ஆவணங்களை தொலைத்துச் சென்ற உரியவர்களைக் கண்டறிந்து ஒருவாரத்தின் பின் ஒப்படைத்த சிகை அலங்கரிப்பு நிலையத்தின் உரிமையாளருக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரியில் அண்மையில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

சிகை அலங்காரம் செய்யச் சென்ற ஒருவர் தான் கொண்டுவந்த பையை கைவிட்டுச்சென்றுள்ளார். கடையைப் பூட்டும்போது அதன் உரிமையாளர் தவறவிடப்பட்ட பையை எடுத்து வைத்துள்ளார். மூன்று தினங்கள் கடந்தும் உரிமைகோரி ஒருவரும் வராத நிலையில் அதனைத் திறந்துபார்த்த போது 15 ஆயிரம் ரூபா பணம், தங்கநகை மற்றும் ஆவணங்கள் காணப்பட்டன.

அதனையடுத்து தொலைத்தவர்கள் தொடர்பில் விசாரித்தபோது வடமராட்சியைச் சேர்ந்த ஒருவரே தொலைத்துவிட்டுச் சென்றுள்ளார் என்று தெரியவந்துள்ளது. இந்தநிலையில் அவர் நிலையத்துக்குச் சென்று ஆதாரங்களைக் காட்டி கண்ணீர்மல்க நன்றிகூறி பையைப் பெற்றுக்கொண்டார். (ச-9)

# பூநகரி பிரதான வீதியை செப்பனிடும் டோக்கியோ

கிளிநொச்சி, ஓக. 21

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான பாதையின் 5.5 கிலோமீற்றர் வீதி டோக்கியோ சிமெந்து நிறுவனத்தால் செப்பனிடப்பட்டு மக்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது.

செப்பனிடும் வேலைத்திட்டம் முடிவடைந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் அண்மையில் திரைநீக்கம் செய்தார்.

'பருவப்பெயர்ச்சி மழைகாலத்தில் நீர்தேக்கங்களிலிருந்து வரும் நீரை உரியவாறு வடிகாலமைத்து நீர்தேங்கும் பகுதிகளுக்குச் செலுத்துவதன் மூலம் இந்தப் பாதையை எந்தவிதப் பாதிப்புமின்றி மக்கள் நீண்ட பாவனைக்குட்படுத்த முடியும். போதிய நிதி வளம் இல்லாமையால் இடைநிறுத்தப்பட்ட இந்த வேலைத்திட்டம் டோக்கியோ சிமெந்து நிறுவனத்தால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 5.5 கிலோமீற்றர் வீதி செப்பனிடப்பட்ட நிலையில் வேலைத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்க உள்ளோம்' என வேலைத்திட்டத்தின் பிரதம பொறியியலாளர் தெரிவித்தார். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூழல் வெப்பத்தால் மன அழுத்தம்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 21

**சூழல் வெப்பமடைவதால் மன அழுத்தம் அதிகரிக்கும். இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**

கராப்பிட்டிய போதனா மருத்துவ மனையின் விசேட உளநல மருத்துவ நிபுணர் ரூமி ரூபன் இது தொடர்பில் மேலும் தெரிவித்தாவது:-

சூழல் வெப்பமடைதல் அதிகரித்துச் செல்லும் நிலையில் மன அழுத்தமும் உக்கிரமடையும். அதிக வெப்பத்துடனான காலநிலை தொடரும் போது, ஏற்கனவே நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் உளநலம் மேலும் சிக்கலுக்குள்ளாகும் நிலை காணப்படுகின்றது. மருந்துகளை உட்கொள்வோர் இவ்வாறான அதிக வெப்பத்துடனான காலப்பகுதியில் அதிகளவு நீரைப் பருகுவது அத்தியாவசியமானது - என்றார். (ம)



# தடுப்பூசிகளால் மற்றொரு சாவு!

## பெற்றோர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 21

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் தடுப்பூசி வழங்கப்பட்டதன் காரணமாக சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

தெனுஜசஸ்மிர நாணயக்கார (வயது-6) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

தடுப்பூசிகள் வழங்கப்பட்டதன் பின்னர் சிறுவனின் உடல்நிலையில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன என்று சிறுவனின் பெற்றோர் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

முழங்காலில் ஏற்பட்ட காயம் மற்றும் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் 6 நாள்களாகப் பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டபோதிலும் குணமடையவில்லை. அவரது நோயைக் கண்டறிய முடியவில்லை என்று பெற்றோர் கூறுகின்றனர். ஆனால், சிறுவனின் உடல்நிலை மோசமடைந்து, மூச்சு விடுவதில் சிரமம் இருப்பதாகக் கூறி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பி வைத்தனர். அவர்கள் அவரை ஒரு இயந்திரத்துடன் இணைக்கமுயன்றுள்ளனர். ஆனால், சுய நினைவு திரும்பாத தெனுஜசஸ்மிர, துரதிர்ஷ்டவசமாக தீவிர சிகிச்சை பிரிவில் இறந்துள்ளார்.

இதன்பின்னர் சிறுவனின் நுரையீரல் சுருங்கிவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். உடல்நிலை மோசமடைந்த சிறுவனுக்கு 3 தடுப்பூசிகளை மருத்துவர்கள் செலுத்தியதாகப் பெற்றோர் கூறுகின்றனர்.

இது தொடர்பில் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜி.விஜேசூரியவிடம் கேட்டபோது; குறித்த சிறுவன் காசநோயால் உயிரிழந்துள்ளார். தடுப்பூசிகள் அவருடைய இறப்புக்குக் காரணம் அல்ல - என்றார். (ம)

# உடவல விபத்தில் 6 பேர் படுகாயம்

கொழும்பு, ஓக. 21

பலாங்கொட, உடவல பிரதேசத்தில் நேற்று சனிக் கிழமை நடந்த விபத்தில் பெண் உட்பட 6 பேர் படு காயமடைந்துள்ளனர்.

டிப்பெண்டர் வாகனம் ஒன்றும், மணல் ஏற்றிச் சென்ற லொறியொன்றும் மோதி இந்த விபத்து நடந்துள்ளது.

டிப்பெண்டர் வாகனத்தில் பயணித்தவர்களே படுகாயமடைந்த நிலையில் பலாங்கொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி மற்றும் கொழும்பு மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-26)

# ஊதியமற்ற விடுமுறை: நீதித்துறைக்கு விலக்கு

கொழும்பு, ஓக. 21

அரச அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஐந்து ஆண்டுகால சம்பளமற்ற விடுமுறைக்காக, நீதித்துறை தொடர்பான அதிகாரிகள் மற்றும் பணியாளர்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது என்று நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நீதித்துறையில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் ஆளணித் தேவைகள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிவரை இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது என்று நீதிச்சேவை ஆணைக்குழு அனைத்து நீதிபதிகள் மற்றும் நீதிவான்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது. (ம)

# கொடுத்த கடனை கேட்டவர் ஆயுதத்தால் குத்திக்கொலை!

கொடுத்த கடனை கேட்கச்சென்ற இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு மஹரகமவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

உயிரிழந்தவர் நாவின்ன பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கடன் வழங்கியுள்ளார். அதனைப் பெறுவதற்காக மற்றொருவரை அழைத்துக்கொண்டு கடனாளி வீட்டுக்கு முச்சக்கரவண்டியில் சென்றுள்ளார். இருவரும் வீட்டின் கேற்றை திறந்தபோது கடனாளி கூரிய ஆயுதமொன்றால் இருவரையும் தாக்கிய நிலையில் அவர்கள் அதே முச்சக்கரவண்டியில் மருத்துவமனைக்குச் சென்றனர். அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். மற்றையவர் சிகிச்சைபெற்று வருகிறார்.

தாக்குதல் நடத்திய சந்தேகநபர் தலைமறைவாகிய நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் மஹரகம பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

மருத்துவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக மருத்துவர்களை அச்சுறுத்தவே சுகாதார அமைச்சு முயற்சிக்கின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாவிட்டால், வேறு வகையான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மருத்துவர்கள் தீர்மானித்துள்ளனர் என்று சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# ஜெரோமின் கருத்துகளுக்காக மன்னிப்புக் கோரிய பெற்றோர்

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் பெற்றோர் தனது மகனின் சர்ச்சைக்குரிய கருத்துகளுக்காக மன்னிப்புக் கோரியுள்ளனர்.

ஓமல்பே சோபித தேரரை அவரது அலுவலகத்தில் சந்தித்து ஜெரோம் பெர்னாண்டோவின் பெற்றோர் தமது மகனின் கருத்துகளுக்காக மன்னிப்புக் கோரியுள்ளனர்.

ஏனைய மதங்கள் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துகளை போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தெரிவித்த காணொலிகள் சமூக ஊடகங்களில் வெளியாகின. அதனைத் தொடர்ந்து சி.ஐ.டியினர் அவர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தனர். கடந்த மே மாதம் ஜெரோம் பெர்னாண்டோ சிங்கப்பூருக்குச் சென்ற நிலையில் நீதிமன்றம் அவருக்கு எதிராகப் பயணத்தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)


## மரண அறிவித்தல்



தாயின் மடியில்
26 . 12 . 1976

ஆண்டவன் அழைப்பில்
10 . 08 . 2023

**பரமேஸ்வரன் ஈஸ்வரக் குருக்கள்**

யாழ்ப்பாணம் கலட்டியை பிறப்பிடமாகவும் ஜேர்மனி டோமாகன் நகரத்தை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரன் ஈஸ்வரக் குருக்கள் 10.08.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரக்குருக்கள் நாகபூசணி அம்மா தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற லோகநாதக் குருக்கள் (நுணுவில் குளக்கட்டு விநாயகர் ஆலய முன்னாள் பிரதம குருக்கள்) புவனேஸ்வரி அம்மா தம்பதிகளின் மருமகனும் அனுஷலா அவர்களின் அன்புக் கணவரும் பிரணிகா, பிரவீன் ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.08.2023 அன்று (13.00 - 15.00) ஜேர்மனியில் Mathias - Giesen - Strabe 11, 41540 Dormagen இல் நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பிற்கு : 0777 393075

தகவல்: லோகநாதக்குருக்கள் குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிங்கப்பூர்...

ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்புக்கான சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்த்தன, ஜனாதியின் பொருளாதார அலுவல்களுக்கான விசேட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரசிங்க ஆகியோரும் செல்கின்றனர்.

அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணத்தை அடுத்து, அவரிடம் உள்ள அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக பிரமித பண்டார தென்னகோனும், நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைளுக்கான பதில் அமைச்சராக செஹான் சேமசிங்கவும், தொழில்நுட்ப அமைச்சராக கனக ஹேரத்தும், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பதில் அமைச்சராக அனுப பெங்குவாலும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-எ-இ)

### மதுபானசாலை...

மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த தங்கராசா பிரதீபன் (வயது- 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பூந்தோட்டம் சந்தியிலுள்ள மதுபான சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இருவர் தாக்குதல் நடத்தியதில் குறித்த நபர் படுகாயமடைந்திருந்தார். வவுனியா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுக்காலை உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பூந்தோட்டத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பாதுகாப்புக் கமராப் பதிவுகள் அடிப்படையில் மற்றொருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ-எ-110,18)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
## விலைமனுக் கோரல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நயினாதீவு வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு கட்டடத்தை அமைக்கவுள்ளது. அதன்படி முன்மொழியப்பட்ட பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்ய யாழ்ப்பாணத்தில் தகுதிவாய்ந்த விநியோகத்தர்களிடம் விலைமனுக்கோருகின்றது.

- கட்டுமான கருவிகள்
- கட்டுமான மூலப்பொருட்கள்

விலை மனுப்பத்திரங்கள் மற்றும் மேலதிக விபரங்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் 21 ஆகஸ்ட் 2023 இலிருந்து 28 ஆகஸ்ட் 2023 காலை 10.00 மணி வரை மீளளிக்கப்படாத தொகை ரூபா 1000.00 ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**ஏனைய விபரங்களுக்கு:**

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை,
இல.67, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு இல.021 2222561 / 0766675526

விலை மனுக்களை கடித உறையில் பொதியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் (SLRCS/PRO/2023/026) என்ற குறிப்பு இலக்கத்தை குறிப்பிட்டு, கீழ்க்காணும் முகவரியிட்டு 28 ஆகஸ்ட் 2023 காலை 10.30 மணிக்கு முன்னர் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் கையளிக்கவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**இல.106,**
**தர்மபால மாவத்தை,**
**கொழும்பு 07.**

(cr.40458) (N.1)



## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

கடந்த (02.09.2023) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்



### அமரர் அரியரத்தினம் செல்வரத்தினம்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நாளை (22.08.2023) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**கற்புலம் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திருமதி சுபாஜினி மதியழகன்
**(பிரதேச செயலாளர்)**



Congratulations!

முல்லை மாவட்டத்தில் முதற்
பெண்மணியாகி
மெனிக்பாம் நிலையத்தில்
மேன்மைப் பணியாற்றி
வல்ல அதிகாரியாக வலிகிழக்கில்
வந்தமர்ந்து மனிதநேயம் தனைக்காத்து
மக்களுக்காய் கடமையாற்றி
மானிடராய் எமை மதித்து
அன்பு, பண்பு அனைத்தையும் அள்ளித்தந்து
அகமகிழ்வாய் அலுவலகப் பணிகளை
ஆர்வத்துடன் புரிய வைத்து
அதி சிரத்தை உறுதி அலை பாயா
மனம் கொண்டு
கடமை ஒன்றே உடைமையாக்கி
கஷ்டங்கள் பல வந்த போதும்
கலங்கா மனத்துடன் அவையேற்று
மக்கள் சேவையை மகத்தானதாக்கி
இலங்கையில் நேர்மைக்கு மகுடம் சூடிய
முதல் நாயகியாய் கௌரவம் பெற்று
வையகம் போற்றும் எங்கள்
சுபாஜினி அம்மாவிற்கு
இதயபூர்வமான இனிய வாழ்த்துக்கள்

Congratulations

ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா
நிறுவனத்தின் இன்டக்ரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்)
2022 / 23 விருதினை பெற்றுக்கொண்ட
எமது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர்
**திருமதி சுபாஜினி மதியழகன்** அவர்களுக்கு
எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம்,**
**வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.**

Congratulations

(cs 26025) (N.1)



## மரண அறிவித்தல்

பிறப்பு 01 • 09 • 1942



இறப்பு 18 • 08 • 2023

### திருமதி உதயலட்சுமி பேரம்பலம்

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உதயலட்சுமி பேரம்பலம் கடந்த (18.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா பூமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சபாபதி ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், பேரம்பலத்தின் அன்பு மனைவியும், நாகதேவி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் கட்டடங்கள் திணைக்களம் - யாழ்ப்பாணம்), நாகநந்தினி (பிரான்ஸ்), நாகநந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் ரவீந்திரகுமார், ஜெகநாதன் (பிரான்ஸ்), காயத்திரி ஆகியோரின் மாமியாரும் ஸாயித்தியாவின் அன்பு அப்பம்மாவும் சீராளன், சற்குரு (கனடா), அமரர் மகேந்திரன், அமரர் யோகலட்சுமியின் சகோதரியும் அமரர் கமலாதேவி, ஜெகதீஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரி (ஜெயம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கியைகள் அவரின் இல்லத்தில் நாளை (22.08.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

**172, அரசடி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(cs 26022) (N.1)

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 9597 310**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் • 11 • 02 • 1956



மறைவு • 20 • 08 • 2023

## திருமதி சிவலோசனி புவனேந்திரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - வேம்படி மகளிர் கல்லூரி)

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலோசனி புவனேந்திரன் நேற்று (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பாக்கியம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நடராசா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், நடராசா புவனேந்திரன் (ஓய்வுநிலை ஆசிரியர் - அச்சுவேலி மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும், நிவேதன் (லண்டன்), நிசாலினி (லண்டன்), நிருஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகிர்தா (லண்டன்), அழகீசன் (லண்டன்), மகிழினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அஷ்சரன், ஆதிரன், சாத்விகா, சஜானன், மித்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், Dr. மீனலோசனி, காலஞ்சென்றவர்களான பத்மலோஜனிதேவி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற Dr. விவேகானந்தன் மற்றும் மகேசன், நாகேந்திரன், அமிர்தலிங்கம், பரமலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 82, பலாலி வீதி, உரும்பிராய் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரின் பிறப்பிடமாகிய இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர் - புவனேந்திரன்
077 207 4373
077 858 8767 (மகன்)

(cs 26022) (N.1)

# மரண அறிவித்தல்

உ சிவமயம்

தோற்றம் • 12 • 10 • 1933



மறைவு • 19 • 08 • 2023

## செ.பாலசுப்பிரமணியம்

(ஓய்வூதியர் நிலவளவைத் திணைக்களம்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட செ.பாலசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (19.08.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமலரின் அன்புக் கணவரும், பிரபாகரன் மற்றும் காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் கௌரி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரராஜா, சரவணபவானந்தன், ஹேமா ஆகியோரின் மாமனாரும், அக்ஷரா, அம்சிதா, மகதீஸ், மஞ்ஜரி, கேதுஜன் ஆகியோரின் நேசமான பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2023) திங்கட்கிழமை முற் பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

நாகலிங்க சுவாமி வீதி,
சங்கானை.

(cs 51738) (N.1)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## உதயகுமார் கமலராணி



தோற்றம் 23.04.1953

மறைவு 13.08.2021

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து

நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஈராண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரங்கள் : திருசெந்திவேல், அருணகிரிநாதன், திலகவதி, சத்தியதேவி, பத்மநாதன்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(cs 26023) (N.1)

# மரண அறிவித்தல்

பிறப்பு • 13 • 04 • 1937



இறப்பு • 20 • 08 • 2023

## திருமதி மனோன்மணி சுந்தரம்பிள்ளை

இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சுந்தரம்பிள்ளை நேற்று (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னதம்பி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், மாதவர் சின்னதம்பி நாகமுத்து தம்பதியரின் மருமகளும், அம்பிகாதேவி, திருஞானசெல்வம், காலஞ்சென்றவர்களான அகிலாண்டநாயகி, திருச்செந்தூர் நாதன் மற்றும் சிவஞானசோதி (சுவிஸ்), அமிர்தகலைவாணி, அரியமலர் (லண்டன்), திரிபுரிநாதன் (சுவிஸ்), கதிர்காமலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற சதானந்தம் மற்றும் தவஜோதி, சிவனேசன், வளர்மதி (சுவிஸ்), ஜீவானந்தன், கணநாதன் (லண்டன்), ராதா (சுவிஸ்), தமிழினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், தர்சன், தனுசியன், தாரணி, அனோஜா - ஆரூரன், அனோஜன், மலரவன், கலைவிழி, காவியா, சுவாதி (சுவிஸ்), தயானி - கிருஷாந், அபர்நாத் (லண்டன்),தர்மிகா, தருண், தஷ்விகன் (சுவிஷ்), லக்ஷயா, விகானா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும், ஆர்த்தி, செழியன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் ஆனந்தர் (நவாலி), சிவராசா, நடராசா, நாகேஸ்வரன் (கோப்பாய்), சிதம்பரேஸ்வரி (சங்குவேலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வர்களான திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை, நாகநாதர், திருமதி லட்சுமிப் பிள்ளை துரையப்பா, இராசதுரை, நடராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2023) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 593 6422 , 077 609 5952

காரைக்கால் சிவன் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

(cs 26026) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலவசக் கணினிக் கற்கைநெறி

# YARL SMART (Pvt) Ltd

## NxtGen Smart Academy (Pvt) Ltd

(Next Generation Smart Academy)

Yarl Smart (Pvt) Ltd நிறுவனத்தின் மாபெரும் அனுசரணையுடன் NxtGen Smart Academy இணைந்து நடாத்தும் இலவசக் கணினி கற்கைநெறியுடனான தொழிற்பயிற்சியும், வேலை வாய்ப்பும்.

மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு இலவசமாக கணினிக் கல்வியை பயிற்றுவிப்பதோடு தொழிற் பயிற்சியினையும் வழங்கி கணினி தொடர்பான வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க உள்ளோம். 120 மாணவர்களை உள்ளடக்கிய வகையில் 04 மாத கற்கைநெறியுடன் தொழிற்பயிற்சியும் நடைபெறவுள்ளது. இக்கற்கைநெறியை மேற்கொள்ள விரும்பும் 18-24 வயதிற்குட்பட்ட மாணவர்கள் 1 -Sep-2023 திகதிக்குள் விண்ணப்பிக்கலாம்.


தொடர்புகளுக்கு
0760075222 / 0756101100
Call/WhatsApp

Join WhatsApp


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 12 . 1981



மறைவு
01 . 08 . 2023

### திரு. நடராஜா நந்தகுமார்
### (பிரபல தவில் இளவரசன்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடராஜா நந்தகுமார் கடந்த (01.08.2023) செவ்வாய்க்கிழமை லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் தவில் கச்சேரிக்குச் சென்றவேளை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அவரது ரசிகப் பெருமக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பானுஷன் (மகன்)

(CS/26024)AH-1

**077 385 8010**

## மரண அறிவித்தல்

பிறப்பு
27 . 12 . 1935



இறப்பு
20 . 08 . 2023

### காசிப்பிள்ளை இரத்தினசிங்கம்

வித்தகபுரம், தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னத்தங்கச்சி அவர்களின் அன்புக் கணவரும், நடராசா மகேஸ்வரி (சுன்னாகம்), திருநாவுக்கரசு (சுதுமலை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஐங்கரன், வனிதா (கொழும்பு), வசந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ராதாகாந்தன் (கொழும்பு), கஜேந்திரன் (லண்டன்), சிவதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காணப்பிரியா, பிரிந்தன், குருசரன், பிரணவி, தருண், சசாலினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் சுன்னாக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26029) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 05 . 1971



மறைவு
19 . 08 . 2023

### பபாணந்தராஜா புஸ்பா

லோட்டன் வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பபாணந்தராஜா புஸ்பா கடந்த (19.08.2023) சனிக்கிழமை இறைபாதம் அடைந்துள்ளார்.

அன்னாருடைய இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாய் - சின்னத்துரை நாகம்மா (மானிப்பாய்)
கணவர் - ராசு பபாணந்தராஜா

தொடர்புகளுக்கு:
**077 244 7096**

(CS 26030) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடன் தொல்லையால் கடத்தல் நாடகம்

கொழும்பு, ஓக.21

கொலன்ன பகுதியில் வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது கடத்தப்பட்டார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கபெற்ற முறைப்பாட்டுக்கு அமைய தேடப்பட்டு வந்த வர்த்தகர் ஒருவர் முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்தபோது மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வர்த்தகர் கடத்தப்படவில்லை என்றும், கடன் தொல்லையில் இருந்து தப்பவே கடத்தல் நாடகமாடினார் என்றும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 16 ஆம் திகதி வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என்று கொலன்ன பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. வர்த்தகர் பயணித்த வாகனம் அனில்கந்த பகுதியிலுள்ள பொது மயானத்துக்கு அருகில் மீட்கப்பட்டது. அந்த வாகனத்தின் சாரதி ஆசனத்துக்கு அருகே மிளகாய்த்தூள் வீசப்பட்டிருந்தது. அதில் சந்தேகமடைந்த பொலிஸார் இந்த விசாரணையில் விசேட பொலிஸ் குழுக்களை ஈடுபடுத்தினர்.

மிரிஹான பொலிஸாருக்கு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த வர்த்தகர் தெல்கந்த பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்றில் பயணிக்கின்றார் என்று தகவல் கிடைத்துள்ளது. உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார், அந்தப் பகுதிக்குச் சென்று வர்த்தகரையும், அவருடன் இருந்த இருவரையும் கைது செய்தனர். சந்தேகநபர்களால் வர்த்தகருக்கு வழங்கப்பட்ட இரண்டரை இலட்சம் ரூபா பணம், பல்வேறு நபர்களுக்கு வங்கியில் பணத்தை வைப்புச் செய்த பற்றுச்சீட்டுகள் மற்றும் வர்த்தகர் நுகேகொடைக்கு வருவதற்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டி என்பனவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கடத்தல் சம்பவம் வர்த்தகர் மூலம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார். இது கடத்தல் அல்ல எனவும் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் காரணமாக திட்டமிட்டுச் செய்யப்பட்ட சம்பவம் என்றும் அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அம்பிலிப்பிடிய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ-இ)


## பணியாளர் தேவை

திருநெல்வேலியில் இயங்கிவரும் உணவகம் மற்றும் பலசரக்கு கடைக்கு பின்வரும் பணியாளர்கள் உடனடியாக தேவை.

முகாமையாளர், காசாளர், விற்பனையாளர், றொட்டி வேலை செய்பவர், சமையல் உதவி, உணவு பரிமாறுபவர், தேநீர் தயாரிப்பாளர்.

உணவு. தங்குமிடம் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

077 844 7773 / 075 844 7773

## வேலைவாய்ப்பு



1. Welder (வெல்டர்)
2. Technician (தொழில்நுட்பவியலாளர்)

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் கீழ்வரும் முகவரிக்கு நேரில் வந்து அல்லது தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவும்.

இல.105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

077 8389 309




## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 • 04 • 1937

மறைவு 01 • 09 • 2022

### அமரர் துரைராஜா தவமணி

**திதி: 21.08.2023**

அன்பின் இருப்பிடமாய் பண்பின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்கள் எல்லோரையும்
வாழவைத்த அன்புத்தாயே !
ஓர் ஆண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள்
நொடிப்பொழுதேனும் எங்களை விட்டகலாதம்மா
அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

196/A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 17 • 06 • 2002

இறப்பு 19 • 08 • 2023

### சந்திரமோகன் தேனுஜன்

**(மொறட்டுவ பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவன்)**

கிளிநொச்சி சோலைநகரை பிறப்பிடமாகவும் விவேகானந்த நகரை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரமோகன் தேனுஜன் கடந்த (19.08.2023) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சந்திரமோகன் (ISA கிளி.தெற்கு கல்வி வலயம்). புகழ்ச்செல்வி (ஆசிரியர் சிவபாத கலையகம்) தம்பதியரின் அன்பு மகனும், சஹானா (கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவி) வின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் விவேகானந்தா நகரிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (21.08.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று. திருநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 266 7666

## பழைய மாணவர் சங்கம்
## வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்
## கேள்வி அறிவித்தல்

O/S/A
V/VTMMV

தலைவர், வ/தமிழ் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க பெறுகைக் குழு, வவுனியா. கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளுக்கான தற்போது தகுதியுடைய தகைமை பெற்ற கேள்வியாளர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விகள் கோரலானது தேசிய ரீதியான வழங்குனர்கள் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவர்கள்.

02. கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள உள்ள தகைமையினை கொண்டிருக்கும் கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள கேள்வியாளர்கள் பொருளாளர். பழைய மாணவர் சங்கம். வவுனியா.(நியூ சுத்தானந்தா விலாஸ். பசார்வீதி. வவுனியா. தொலைபேசி இல 077 3079294) எனும் முகவரியில் கேள்விப் பத்திரம் வழங்கும் காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணிவரை கேள்வி ஆவணங்களை இலவசமாக பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

04. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பொருளாளர். பழைய மாணவர் சங்கம். வவுனியா.(நியூ சுத்தானந்தா விலாஸ். பசார்வீதி. வவுனியா. தொலைபேசி இல 077 3079294) எனும் முகவரியில் 19/08/2023 முதல் 26/08/2023 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரை கீழே அட்டவணையில் குறிப்பிட்டவாறு மீளளிக்கப்படாத தொகையினை பணமாக செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும்.

05. பூரணப்படுத்தப்பட்ட பொதி செய்யப்பட்ட கேள்வி மனுக்கள் யாவும் இரட்டை பிரதிகளில் 27/08/2023 திகதியன்று பி.ப 3.00 க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர். பெறுகைக்குழு. பழைய மாணவர் சங்கம், வ/தமிழ் மத்திய மகாவித்தியாலயம். கண்டி வீதி வவுனியா என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாக ஒப்படைப்பவர்கள் வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய நுழைவாயில் காவலறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி தாரர்கள் வேலையின் விபரத்தை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். விலைக் கேள்விகள் வருகை தந்த கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்வி சமர்ப்பித்தல் முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.

06. கேள்விகள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு செல்லுபடியானதாக இருக்கும்.

07. சகல கேள்விகளுடனும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைமுறி (காசு) செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| வேலையின் விபரம் மற்றும் கேள்வி இலக்கம் | தேவையான இயந்திரங்கள் | கேள்வி செல்லுபடியாகும் காலம் (நாட்கள்) | கேள்விப்பிணை விபரம் | | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) | வேலைகாலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|
| | | | தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் (வரை) | | |
| 01/2023 Hire of Machinery for Reconstruction & Upgrading of V/Vavuniya Tamil Madhya Maha Vidiyalayam School ground | **Motor Grader 10-12'** **Vibrating roller - 10T** **Water bowzer (3000L)** | 30 | 20000.00 | **23/10/2023** | 1000.00 | 21 |
| 02/2023 Loding and Transporting soil from 5Km distance for Vavuniya Tamil madhya Maha Vidyalayam ground surface | **Minimum 2 Numbers Backhoe Loader** **Minimum 8 Numbers Dipper(3Cube)** | 30 | 25000.00 | **23/10/2023** | 1000.00 | 21 |

**க.ஹரிப்பிரசாத்**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பழைய மாணவர் சங்கம்,**
**வ/ வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்.**

(எ) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவா, கசிப்பு இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 21
ஆனைக்கோட்டைப் பகுதியில் கஞ்சா கலந்த மாவா போதைப்பொருள் மற்றும் கசிப்பு ஆகியவற்றுடன் இருவர் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
நேற்று ஞாயிற்றுக்கிழமை அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் இந்தக் கைது இடம்பெற்றது.
சந்தேகநபர்களிடமிருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு, 225 கிராம் கஞ்சா கலந்த மாவா ஆகியவை மீட்கப்பட்டன.
சந்தேநபர்களை சட்டநடவடிக்கைக்குட்படுத்த சான்றுப்பொருள்களுடன் யாழ்ப்பாண பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.
(ச-26-20-27-125)


# மரண அறிவித்தல்

மண் மகிழ 29 . 05 . 1957



மண் நெகிழ 20 . 08 . 2023

## கிருஷ்ணர் நவரத்தினம்

பிரதான வீதி அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் நவரத்தினம் அவர்கள் நேற்று (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், அமரர் பொன்னையா பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், சுசீலாவின் அன்புக் கணவரும், பார்த்தீபன் (பின்லாந்து), சிந்துஜா (பிரான்ஸ்), சாரங்கன் (மின் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயதர்சினி (பின்லாந்து), கிருஷ்ணசீலன் (பிரான்ஸ்), தமிழேந்தினி (HNDA பட்டதாரி) ஆகியோரின் மாமனாரும், சாலுஷா, லக்ஷா (பிரான்ஸ்), சயானிகா (பின்லாந்து) அக்ஷா ஆகியோரின் பேரன்புமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை பிரதான வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9810 864

(CR 40471) A-1



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திரு. சிவப்பிரகாசம் கந்தசாமி

(திருப்பதி கிறீம்ஹவுஸ்,
ஸ்ரீஸ் கொமினிகேஷன்)



நீங்கள் மண்ணிலிருந்து
- மறைந்து ஓராண்டு
கடந்து விட்டது எத்தனை
- ஆண்டுகள்
கடந்து விட்டாலும் எங்களோடு
- நீங்கள் வாழ்ந்த
அந்த பசுமையான
- நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு அகலாது

**உங்கள் நினைவுகளோடு என்றும் வாழும்**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்**
**மற்றும் உறவினர்.**

பிறப்பு 05.05.1940
இறப்பு 02.08.2022
திதி: 21.08.2023

மகன் - ஸ்ரீசங்கர் (பாபு)
திருப்பதி கிறீம் ஹவுஸ், வவுனியா.



# மரண அறிவித்தல்



தோற்றம் 20.03.1965
மறைவு 20.08.2023

## குணசிங்கம் குணராசா

மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் குணராசா நேற்று (20.08.2023) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற குணசிங்கம் (அப்புலிங்கம்) மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் அல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமலிங்கம் வல்லிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் திலகராணியின் அன்புக் கணவரும் சுபாஜனன் (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையாரும் குணமதி (யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்) குணசேகர், குணறதி, குணேந்திரா (லண்டன்), குணகீதா (மாந்தை கிழக்கு பிரதேச செயலகம்), குணந்தா, காலஞ்சென்ற குணரூபன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் பரிமளராணி, பிறேமராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற பிரபாகரன், வசந்தராணி (லண்டன்), காலஞ்சென்ற பாஸ்கரன், ஜெயராணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**மீசாலை வடக்கு.**

(CR 40472) M-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன்...

இலங்கையின் முன்னணிக் கடன் வழங்குநரான சீனாவுக்கு சுமார் 7.4 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை செலுத்தவேண்டியுள்ளது. இலங்கையின் ஏனைய பிரதான கடன் வழங்குநர்களான இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் ஒன்றிணைந்து செயற்படும் நிலையில், அதில் இணைவதற்கு சீனா மறுத்து வருகின்றது.

இலங்கையின் கடன்மறுசீரமைப்புத் தொடர்பாக பரிஸ் கிளப் ஊடாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் சீனா கண்காணிப்பாளராக மட்டுமே உள்ளது. கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஏனைய கடன் வழங்குநர்களுடனான பொறிமுறை ஒன்றின் கீழ் இணக்கப்பாட்டுக்கு வருவதில் சீனா இன்னமும் இறுதி முடிவை அறிவிக்கவில்லை.

சீனாவின் இந்தப் போக்கு இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றது. பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் அண்மையில் சீனா சென்றபோது, கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். ஆனால், சீனா கடன் மறுசீரமைப்புத் தொடர்பாகப் பேசாது, கடன் முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல்களையே முன்னெடுத்து வருகின்றது.

அதேநேரம், சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு ஒன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கும், 27ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளது. இந்தக் குழுவின் பயணத்தின்போது இடம்பெறவுள்ள முதலாவது மதிப்பாய்வுக் கூட்டத்தில், கடந்த ஜூன் மாத இறுதி வரையான விரிவாக்க நிதி வசதித் திட்டத்தின் செயற்றிறன் தொடர்பாகப் பரிசீலிக்கப்படவுள்ளது.

விரிவாக்க நிதி வசதித் திட்டத்தின் செயற்றிறன் அந்தக் குழுவாலும், சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபையாலும் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே சுமார் 350 மில்லியன் டொலர் நிதி உதவி இலங்கைக்குக் கிடைக்கும். இது சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபையால் கடந்த மார்ச் மாதம் அனுமதிக்கப்பட்டிருந்த 2.9 பில்லியன் டொலரின் ஒரு பகுதியாகும். ஆயினும் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படாவிடால் இந்த உதவி கிடைக்காமல் போவதற்கான சந்தர்ப்பமே அதிகமென்பதால், இலங்கை கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளது. (அ-ஏ-இ)

## 120 மருத்துவர்கள்...

வெளிநாடுகளுக்குச் சென்று பணிக்குத் திரும்பாத விசேட மருத்துவர்களே கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி முதல் இந்த ஆண்டின் ஓகஸ்ட் 18ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 363 மருத்துவர்கள் வெளிநாட்டுப் பயிற்சிக்காகச் சென்றுள்ளனர். அவர்களில் 120 பேர் மீண்டும் நாடு திரும்பவில்லை. 29 மயக்கவியல் நிபுணர்களில் 12 பேர் நாடு திரும்பவில்லை. கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள மருத்துவர்கள் நாடு திரும்பமுடியும். ஆனால், அவர்கள் மருத்துவ சேவையில் ஈடுபடுவதானால் பொதுச் சேவை ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்வது அவசியம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ஏ-இ)

## விசுவமடு...

கிளிநொச்சி, பரந்தனைச் சேர்ந்த தர்மலிங்கம் நகுலேஸ்வரன் (வயது-47) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

விசுவமடு, றெட்பானாவில் இருந்து மோட்டார்சைக்கிளில் பெரிய பரந்தன் நோக்கிப் பயணித்த இவர், விசுவமடு 12ஆம் கட்டைப் பகுதியில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். இந்த விபத்து இரவு 8.30 மணியளவில் நடந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்து மயக்கமுற்ற இவர் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (அ-ஏ-26,113)

## அதிவேக...

கரவெட்டி, வதிரியைச் சேர்ந்த வி.நிசாந்தன் (வயது-29), மன்னாரைச் சேர்ந்த செ.பென்சன் மனோஜ்குமார் (வயது-31) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த மோட்டார்சைக்கிள் வீதி வளைவொன்றில் கட்டுப்பாட்டை இழந்து மதகுக்குள் பாய்ந்தே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்கள் போதைப் பொருள் உபயோகித்திருந்தமை உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ-ஏ-26,100,27,125)

## நல்லூர்க்...

திகதி தேர்த்திருவிழாவும், 14ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. மஹோற்சவகால ஏற்பாடுகள் யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர் பிரதேச செயலகம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உற்சத்தை முன்னிட்டு நேற்று முதல் எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் திகதி வரை ஆலயத்தைச் சூழவுள்ள யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, அரசடி வீதி, கோவில் வீதி, செட்டித்தெரு வீதி ஆகிய வீதிகளின் ஊடான வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதுடன், போக்குவரத்துக்கான மாற்று ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. (அ-ஏ-இ)

## சீனா...

சீனக் கண்காணிப்புக் கப்பல் இந்தியப் பெருங்கடல் ஊடாக இலங்கைக்குச் செல்கின்றமையும், கொழும்பில் ஒரு மாத காலம்வரை நங்கூரமிட்டு முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளும் இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என்று புதுடில்லி கருதுகின்றது.

இந்த விவகாரத்தால் பெரும் இராஜதந்திர நெருக்கடியை இலங்கை எதிர்நோக்கியுள்ளது. சீனக் கப்பலின் வருகை தொடர்பாக இராஜதந்திர மட்டப் பேச்சுக்களை இலங்கை ஆரம்பித்துள்ளது.

இந்திய - சீன இராஜதந்திர மோதல்களைச் சமநிலைப்படுத்த வெளிவிவகாரத்துறையில் அனுபவமிக்க இரு அதிகாரிகளை புதிய தூதுவர்களாக நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தியாவுக்கான புதிய தூதுவராக மூத்த இராஜதந்திர அதிகாரியான ஷேனுகா செனவிரத்னவை நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், சீனாவுக்கான தூதுவர் தொடர்பாக தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

கண்காணிப்புக் கட்டமைப்புக்கள் மற்றும் ஆய்வுகூடங்களை உள்ளடக்கிய சீன கண்காணிப்பு ஆய்வுக் கப்பலான ஷி யான் - 6 இலங்கை வரவுள்ள நிலையில், இந்தியா அதற்கு எதிராகக் கடும் எதிர்வினையாற்றுகின்றது. இந்தக் கப்பலின் வருகை இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று இந்தியாவில் பல தரப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. சீனக் கப்பலின் வருகை தொடர்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளபோதும், இன்னமும் அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை. இந்தக் கப்பலின் கடற்செயற்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்து அனுமதி வழங்குவது தொடர்பாக இராஜதந்திர மட்டப் பேச்சுக்கள் நடக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இந்தக் கப்பல் புவி இயற்பியல் ஆய்வு, நில அதிர்வுக் கண்காணிப்பு போன்றவற்றை உள்ளடக்கிய அதிநவீன ஆய்வுக் கப்பலாம். கடல் ஆய்வுத்திறனை அதிகரித்தல், கடல்சார் இறையாண்மை மற்றும் நலன்களைப் பாதுகாத்தல் போன்ற காரணங்களுக்காகவே சீனா இந்தக் கப்பலை உருவாக்கியிருந்தது. (ஏ-இ)

## ஐ.எம்.எப்...

சமர்ப்பிக்கப்படாத உறுதிமொழிகளின் எண்ணிக்கை கடந்த மார்ச் மாதம் 9 வீதத்தில் இருந்த நிலையில், அது ஜூலை மாதத்தில் 15 வீதமாக அதிகரித்துள்ளது என்று அந்தச் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இந்த உறுதிமொழிகளை நியாயமாக மதிப்பீடு செய்வதற்குப் போதுமான தகவல்கள் இல்லாமை சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் அரசாங்கத்தின் முன்னேற்றத்தைத் தெளிவாகக் காண்பதில் உள்ள சிரமத்தைக் காட்டுகின்றது என்றும் அந்தச் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

'வெரிட்டே ரிசேர்ச்' சஞ்சிகையின் சர்வதேச நாணய நிதியக் கண்காணிப்பான் என்னும் தளத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இது சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதோடு, சரிபார்க்கக்கூடிய அளவுகோல்களின் அடிப்படையில் 'நிறைவேறிய', 'நிறைவேற்றப்படாத' அல்லது 'அறியப்படாத' உறுதிமொழிகளை வகைப்படுத்துகின்றது.

"அறியப்படாத" உறுதிமொழிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பு இரண்டு காரணிகளின் அடிப்படையில் இருக்கலாம் என்று 'வெரிட்டே ரிசேர்ச்' குறிப்பிடுகிறது.

அரசாங்கம் இந்த உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறிவிட்டு, தோல்வியை ஒப்புக்கொள்வதைத் தாமதப்படுத்தும் நோக்கில் தகவல்களைப் பகிரங்கப்படுத்தாமை முதலாவது காரணமாகக் கூறப்படுகின்றது.

இந்தத் திட்டங்களை செயற்படுத்துவதில் பொதுமக்களையோ அல்லது நாடாளுமன்றத்தையோ முக்கியமான பங்குதாரர்களாக அரசாங்கம் பார்க்கவில்லை. மேலும், அவர்களுக்கு அத்தியாவசிய தகவல்களை வழங்குவதில் அக்கறை காட்டாமையை இரண்டாவது காரணமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜூலை மாத இறுதிக்குள், சர்வதேச நாணய நிதியத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்ட 57 உறுதிமொழிகளில் 35 ஐ இலங்கை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. இது ஜூன் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட 33 உறுதிமொழிகளுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

செப்ரெம்பர் மாத இறுதிக்குள், சர்வதேச நாணய நிதியம் தனது வேலைத்திட்டத்தின் முதல் மீளாய்வை நடத்தி இரண்டாவது தவணை நிதியை வழங்கவிருக்கும் போது, இலங்கை 71 உறுதிமொழிகளை நிறைவேற்றியிருக்க வேண்டும். இந்த இலக்கை அடைய, இலங்கை ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் மாதத்துக்கு 18 உறுதிமொழிகளை நிறைவேற்றவேண்டும்.

முன்னேற்றத்தை மதிப்பிடுவதில், கொள்கை தொடர்பான எந்தவொரு செயலும் அதன் நிறைவு நிலையை பொது மக்களுக்கு வெளிப்படுத்தத் தவறினால், அது நிறைவேற்றப்படாத உறுதிமொழிகளாகக் கருதப்படுகிறது.

இதன் விளைவாக, அரசுக்குச் சொந்தமான இரண்டு பெரிய வங்கிகள் மற்றும் மூன்று முன்னணி தனியார் துறை வங்கிகளுக்கான சொத்து மதிப்பீட்டு மதிப்பாய்வை முடிவு செய்வதாக ஏப்ரல் மாதத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழி, "அறியப்படாத" நிலையில் இருந்து "நிறைவேற்றப்படாத" உறுதிமொழியாக மறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜூலை இறுதியில், மொத்தம் ஏழு உறுதிமொழிகள் "நிறைவேற்றப்படாத" உறுதிமொழிகளாக வகைப்படுத்தப்பட்டன என 'வெரிட்டே ரிசேர்ச்' தெரிவித்துள்ளது.

(அ-ஏ-இ)

## 'திருப்பி...

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற 'மலையகத் தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு' எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நேற்றுமுன்தினம் மாத்தளையில் மலையக மக்கள் சிலர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கமும், சட்டமும் எங்களுக்குப் பாதுகாப்புத் தராவிட்டால், எமது குடும்பத்தையும், சொத்தையும் பாதுகாக்க நாம் திருப்பி அடிக்க முடியும். வன்முறையாளர்களுக்கு அடிதான் புரிகின்ற வார்த்தை எனில் அதைப் பேச நாம் தயார் என்பதை பொறுப்புடன் கூறிவைக்க விரும்புகிறேன்.

நீதியரசர் இளஞ்செழியன் தனது தீர்ப்பு ஒன்றில், தற்காப்புக்காகத் திருப்பி அடிக்கும் உரிமையின் சட்டவரம்பு பற்றிக் கூறியுள்ளார். அதையே நான் இங்கு பிரதிபலிக்கிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மைப் பேச்சுக்கு அழைக்கிறார். ஆனால், நாம் பலமுறை கூறியும், அவரது அரசாங்கம், எமது மக்களுக்கு எதிராக பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடத்தும் அராஜகங்களைக் கண்டும் காணாமல் இருக்கிறது.

பெருந்தோட்டங்களில் எமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதம் தராவிட்டால், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஜனாதிபதியுடன் பேச்சில் கலந்துகொள்ளும் முடிவை மறுபரிசீலனை செய்யும் - என்றார். (அ-ஏ-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வுக்கு நாம் ஆதரவளிப்போம்

## சரித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஓக.21
அதிகாரப்பகிர்வுக் கோட்பாட்டுக்கு டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை ஆதரவு வழங்கும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் எதிர்காலத் திட்டம் என்ன என்பது பற்றித் தெரியாது. நாடாளுமன்றத்துக்கு யோசனை முன்வைக்கப்பட்ட பின்னரே அது தொடர்பில் ஆராய்ந்து நிலைப்பாட்டை அறிவிக்க முடியாது. எனினும், கொள்கை அடிப்படையில் அதிகாரப்பகிர்வுக்கு நாம் ஆதரவு.
அதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் சார்பில் பொது வேட்பாளர் ஒருவர் களமிறங்கவேண்டும். அதற்கான முயற்சியை நாம் முன்னெடுத்துவருகின்றோம் - என்றார். (எ-44)

# வறட்சியால் வடக்கில் பயிற்செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக.21
வடக்கு மாகாணத்தில் வறட்சி காரணமாக நெல் செய்கை, மரக்கறிச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மற்றும் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

**மன்னார்**
மன்னார் பெரியமடுவில் சுமார் 200 ஏக்கர் நெற் செய்கை பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது. தேக்கம் விவசாய போதனாசிரியர் பிரிவில் சுமார் 20 ஏக்கர் பயறு செய்கையும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்று மன்னார் மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் தெரிவித்தார்.

**வவுனியா**
வவுனியா மாவட்டத்தில் நெற்செய்கை சில இடங்களில் பாதிக்கப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்டப் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் தெரிவித்தார்.

**கிளிநொச்சி**
கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் மரக்கறிச் செய்கையும் வறட்சியால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கல்மடுவில் கிணறுகளே பிரதான நீர் வழங்கல் நிலைகளாக உள்ள நிலையில், தற்போது கிணறுகள் வற்றியுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்

**முல்லைத்தீவு**
முல்லைத்தீவு மாவட்டத்தில் கறிமிளகாய், கத்தரி மற்றும் மிளகாய்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிப்புத் தொடர்பான விவரங்கள் தற்போது சேகரிக்கப்படுகின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

**யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை வறட்சியால் ஏற்பட்ட பாதிப்புக்கள் எவையும் பதிவாகவில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-125)

# மீண்டும் ரணில் ஜனாதிபதியாக தமிழர் ஆதரவளிக்கவேண்டும்!

## விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.21
ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.
வட்டுக்கோட்டையில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாடு பல்வேறு இக்கட்டான நிலைமைகளில் சிக்கியபோது மீட்டெடுத்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. எதிர்காலத்தில் ரணில் விக்கிரமசிங்க வடக்கின் அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்களை நிச்சயம் நிறைவேற்றுவார்.
கடந்த காலங்களில் விட்ட தவறைத் தொடர்ந்தும் செய்யாது, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (எ-26)

# இராஜதந்திர சேவைக்கும் வாகன இறக்குமதித் தடை

கொழும்பு, ஓக.21
சலுகை அடிப்படையில் பொதுத்துறை ஊழியர்களுக்கான வாகன இறக்குமதி இடைநிறுத்தல் கொள்கை இராஜதந்திர சேவைக்கும் பொருந்தும் என்று நிதியமைச்சு அறிவித்துள்ளது.
நிதி அமைச்சின் கீழ் உள்ள வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம், வெளியுறவு அமைச்சுக்கு இவ்வாறு அறிவித்துள்ளது.
வெளிநாட்டு இராஜதந்திர சேவையில் உள்ளவர்கள் வாகனங்களை இறக்குமதி செய்யலாம் என்ற தவறான கருத்து உருவாக்கப்படலாம் என்ற அடிப்படையில், கடந்த ஜூன் மாதம் வெளியிடப்பட்ட வெளிவிவகார அமைச்சின் சுற்றறிக்கையைத் தொடர்ந்து இந்தத் தகவல் அனுப்பப்பட்டுள்ளது என்று திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.
நிதி அமைச்சு அல்லது சுங்கம் அனுமதி வழங்காது என்பதால் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் கீழ் மோட்டார் வாகனங்களை கப்பல் அல்லது இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரத்தை வழங்குவதைத் தவிர்க்க வேண்டும் என்று திணைக்களம், வெளியுறவு அமைச்சுக்கு அறிவித்துள்ளது. (எ-இ)


மணமகள் தேவை
1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
Viber or Whatsapp
0044 7578 626565, 077 251 9150
Email add: rajasasikumar@gmail.com

வகுப்புகள்
A/L தமிழ் - புதிய பிரிவு
(குழு, பிரத்தியேகம்)
நா.தமிழிந்திரன் M.A
ஆரம்ப அடிப்படை விளக்கங்கள்
T.P.:077 547 8159
STEM - கோண்டாவில்

CANADA VISA
1) Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2) Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3) Student Visa - IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். (Jan 2024)
4) Work and Study Program - Course fee after Visa
மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Contact: VISA Consultant,
136, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. T.P: 077 038 5584

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் புத்தூரில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* நிலப்பரப்பு
* மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 km மீற்றர் தூரம்.
* நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை ஐந்து லட்சம் (500,000/=)
* பின்பக்கம் உள்ள காணி 1 பரப்பு இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் (250,000/=) மட்டும்
* நல்ல சூழலில் நன்னீர் ஊற்று.
தொடர்பு: 076 057 0354, 076 8260 354

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
* நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
* செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
நல்ல சூழல்.
* 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன். நிலப்பரப்பு
பார்வையிடும் நேரம் :-
காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை
தொடர்பு:- குரு
077 8743 204, 077 2880 152, 077 076 0389

DHL வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் T.P: 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org